விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 302 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 30 புதன்கிழமை (16.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கல்வியில் சீர்திருத்தம்

## ஐ.நா உதவிச் செயலாளருடன் பிரதமர் கலந்துரையாடல்

(கொழும்பு)

நாட்டின் கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் ஐக்கிய நாடுகளின் உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜாவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. 15



## இலங்கை - இந்திய உறவை பிளவுபடுத்த முயற்சிகள்

### இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கை - இந்திய உறவை பிளவுபடுத்த முயற்சிகள் இடம்பெறுவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பட்டயக் 15

# அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்



## அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத்

(கொழும்பு)

- ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளில் எந்த அநீதியும் இடம்பெறாது.
- வாகனங்களை இறக்குமதி செய்யும் நிலைப்பாட்டில் அரசாங்கம்
- ஐ.எம்.எவ் உடன் மீண்டும் பேச்சுவார்த்தை.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் நாளை விசேட உரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தலின் 15

## வடக்கில் மழைக்கு சாத்தியம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக 15

வவுனியா தோணிக்கல் பகுதியில்

## அம்மன் ஆலயத்துக்கு விசமிகள் தீ வைப்பு



நகையும் கொள்ளையடிப்பு

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள நாகபூசணி 15

## சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் ஊழல், மோசடிக்கு உட்படுத்த முடியாது

### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க



(கொழும்பு)

பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், அவற்றை மோசடி அல்லது ஊழலுக்கு உட்படுத்துவதற்கு எவருக்கும் உரிமை இல்லை எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வலுசக்தி அமைச் 15

## தேர்தலை நியாயமாக நடத்த முழு ஒத்துழைப்பைத் தாருங்கள்

### ஊடகப் பிரதானிகளிடம் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலிலும் சகல வேட்பாளர்களுக்குமான சம வாய்ப்பை வழங்கி, அத் தேர்தலை நியாயமான முறையில் நடத்தி முடிப்பதற்கு அவசிய 16

தேர்தலில் போட்டியிடும்

## கட்சித் தலைவர்களுக்கு யாழில் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடும் கட்சி 15

காங்கேசன்துறை – நாகை

## பயணிகள் கப்பல் சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையானது காற்றழுத்தத் 15

## மக்கள் ஆதரவிற்கான அழைப்பு

2024 ஆம் ஆண்டு அமையப் போகின்ற சிறந்த பாராளுமன்றத்திற்கு, சிறந்த மக்கள் பிரதிநிதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களே!

எனக்கு ஆதரவு வழங்க விரும்பினால், அதற்கு உங்களால் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் மற்றும் அரசியலில் எமது நிலைப்பாடு என்ன என்பது தொடர்பான கலந்துரையாடல்...

காலம் - 16,17,18 ஆம் திகதிகளில் ஐப்பசி மாதம் 2024 மாலை 7 மணி.
இடம் - சிங்கை அவை, இல.214 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாற்றத்திற்கான நம்பிக்கை...

ஊஞ்சல் சின்னம்



(002)

சுயேச்சைக் குழு - 2 | X

E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

(2320)


# நிதி நிலைமையை பொறுத்து அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

## அமைச்சர் விஜித ஹேரத்

நிதிநிலைமையைப் பொறுத்து அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் நேற்று இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், தேர்தல் நெருங்கும் போது, கடந்த அமைச்சரவை அரசு ஊழியர்களின் சம்பளம் ஜனவரி முதல் உயர்த் தப்படும் என்று திடீர் முடிவொன்றை எடுத்தது.

ஆனால் நாங்கள் விசாரித்தபோது அதற்கு நிதி அமைச்சகம் ஒப்புதல் அளிக்கவில்லை. உண்மையில் இதன் மூலம் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

சம்பளத்தை உயர்த்துவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. நிறைவேற்ற முடியுமா? எப்படி? நிதி நிலைமையை வைத்து புதிய முடிவை எடுப்போம். இல்லை என்று சொல்ல மாட்டோம். நிதி நிலையைப் பொறுத்துதான் முடிவு செய்ய வேண்டும் என்றார். (ம-7)


### விசா ஆலோசனைகளுக்கு

ஐரோப்பா (SCHENGEN COUNTRIES) அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கான விசா சம்பந்தப்பட்ட ஆலோசனைகளுக்கு :

**078 521 9041**

(2322)


## நீங்கா நினைவுடன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திலகவதி கனகசபை

தோற்றம் 11.05.1941 — மறைவு 16.10.2023

(புரட்டாதி வளர் பக்கம் துதியை)

அம்மா ஓராண்டு ஓடினாலும்
ஓயவில்லை எம் துயரம்
ஒவ்வொரு நொடியும் எமக்குள்
உன் நினைவுகள் தானம்மா!
அன்புடனே அரவணைத்து அருகிருந்து
அமுதூட்டிய எம் அன்னையே! நீ
சென்ற இடம் தெரியாது
மனங்கலங்கி உருகித் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

முருகன் கோவிலடி,
புலோலி.

**பிள்ளைகள்**

(C-1403)


## விற்பனைக்குண்டு

01. யாழ். மானிப்பாய் வீதியில் 05 பரப்புக் காணியும்.
02. யாழ். மின்சாரநிலைய வீதியில் ஒரு பரப்புக் காணியும்
03. யாழ். பிறவுண் வீதியில் 02 பரப்புக் காணியும்.
04. யாழ். அரசடி வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணியில் அமைந்த கடைக்கட்டடமும்
05. யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையாக நல்லூர் குறுக்கு வீதியில் 10 பரப்புக் காணியும்
06. யாழ். திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 1 1/2 பரப்பில் அமைந்த காணியுடனான வீடும்.
07. யாழ்.தட்டாதெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியும், மாடிக்கட்டடமும்
08. யாழ்.விக்ரோரியா வீதியில் 12 பரப்புக் காணியும் 16 பரப்புக் காணியும்
09. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

**077 7232 535**

(C-1402)


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் திருநாவுக்கரசு

**தோற்றம்** 03.06.1939 — **மறைவு** 15.10.2024

புங்குடுதீவு 2 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 10/2 சிவநகர் உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.69.B.A, தம்பிலேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் திருநாவுக்கரசு அவர்கள் 15.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பறுபதம், செல்லமுத்து, சிவபாக்கியம் மற்றும் பொன்னம்மா, வள்ளிப்பிள்ளை, இலட்சுமன்னன்(ஓய்வுபெற்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் - கரைச்சி), சுந்தரராஜா(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, ஆனந்தமூர்த்தி, வைத்தியலிங்கம், மகேஸ்வரி மற்றும் சாந்தலிங்கம், ஞானசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2024 இன்று புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று (இல.69.B.A, தம்பிலேன், யாழ்ப்பாணம்) பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.69.B.A,
தம்பிலேன்,
யாழ்ப்பாணம்.

*தகவல் :*
நா.இலட்சுமன்னன்
நா.சுந்தரராஜா
(சகோதரர்கள்)

(2319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிராக போராடுங்கள்!

## வர்த்தக சமூகத்தினர் மத்தியில் ஜூலிசங்

(கொழும்பு)

**பொருளாதார சீர்திருத்தங்கள் கடினமானவை. ஆனால் இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது என தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் சர்வதேச நாணயநிதியத்தின் சீர்திருத்தங்களின் பாதையில் செல்லவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற அமெரிக்க-இலங்கை வர்த்தக பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, எதிர்காலத்தை கட்டியெழுப்புவது இலகுவான விடயமல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் ஈஎவ்எவ் திட்டம் பொருளாதார ஆட்சிமுறை சீர்திருத்தங்களையும் ஊழலிற்கு எதிரான போராட்டங்களையும் கோருகின்றது. பொருளாதார சீர்திருத்தங்கள் கடினமானவை ஆனால் இலங்கை சரியான பாதையில் பயணிக்கின்றது.

எனக்கு புதிய ஜனாதிபதி புதிய பிரதமரை சந்தித்து இந்த விடயங்கள் குறித்து உரையாடுவதற்கான சந்தர்ப்பம் சமீபத்தில் கிடைத்தது.



சிலநாட்களிற்கு முன்னர் யுஎஸ்எயிட்டின் நிர்வாகி சமந்தா பவர் பொருளாதார சீர்திருத்தங்களின் அவசியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியமான பகுதியான சிறிய நடுத்தர தொழில்துறையினருக்கு நாம் எவ்வாறு உதவலாம் என்பது குறித்தும் உங்கள் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடினேன்.

கடந்த மாதம் வாக்குபெட்டிகள் மூலம் இலங்கை மக்கள் மாற்றத்திற்கான அழைப்பை விடுத்ததை நாம் பார்த்தோம். அவர்கள் நாட்டின் எதிர்காலத்திற்கான தங்களுடைய எதிர்பார்ப்பை, நோக்கை வெளியிட்டனர். இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நாட்டின் தலைவர்களிடம் உள்ளது.

அரசாங்கத்தில் உள்ளவர்களிற்கு மாத்திரமல்லாமல் வர்த்தகம், கல்வி,ஊடகம் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களிற்கும் இதற்கான பொறுப்புள்ளது.

அமெரிக்கா இலங்கை ஆகியவற்றின் வர்த்தகங்களிற்கு இடையிலான உறவு பலவருட பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த உறவுகள் தொடர்ந்து செழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்வு கூறக்கூடிய நிலையான நிர்வாக முறையை உருவாக்குவது அவசியம்.

கொள்கைகள் தெளிவானதாகவும் விதிமுறைகள் சீரானதாகவும், சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும் சூழலில் வணிகங்கள் செழித்து வளர்கின்றன. ஒரு நிலையான நிர்வாக அமைப்பு அதிக முதலீட்டை ஈர்க்கும். அதிக வேலை வாய்ப்புக்களைப் உருவாக்கும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும்.

அமெரிக்க-இலங்கை வணிக உறவுகளின் எதிர்காலம் குறித்து நான் நம்பிக்கை கொண்டுளளேன். சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தங்களின் பாதையில் செல்வதன் மூலம் ஊழலிற்கு எதிராக போராடுவதன் மூலம் அனைவரினதும் குரல்களும் செவிமடுக்கப்படும். அனைவரும் உள்ளடக்கப்படும் எதிர்வுகூறக்கூடிய நிர்வாக அமைப்பை கட்டியெழுப்புவதன் மூலம் எங்கள் பொருளாதார கூட்டாண்மையின் முழுமையான திறனை வளர்க்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# வெள்ளத்தால் 159,511 பேர் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

40,758 குடும்பங்களைச் சேர்ந்த 159,511 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2,433 குடும்பங்களைச் சேர்ந்த 10,361 பேர் 80 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாகவும் 370 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகத் தரவுகள் பதிவாகியுள்ளன.

ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக இதுவரை மூவர் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# மீண்டும் டெங்கு தீவிரம்! சுகாதாரத்துறை எச்சரிக்கை!

கொழும்பு)

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு நோய் பரவல் மீண்டும் தீவிரமடையும் அபாயம் காணப்படுவதாகச் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 40, 657 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த காலப் பகுதியில் டெங்கு நோயினால் 20 உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில 1, 247 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களைச் சுத்தப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் அனோஜா தீரசிங்க அறிவுறுத்தியுள்ளார். (நி)

# இலங்கை-இந்தியா புகையிரதப்பாதை மீண்டும் ஆராய்வு - சுற்றாடல் அமைச்சு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான புகையிரதப்பாதை இணைப்புத்திட்டம் குறித்து மீண்டும் ஆராயப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி இந்தியாவின் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். இதற்கான செலவை இந்தியாவே பொறுப்பேற்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளினதும் வர்த்தகர்கள் அதிகளவு கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளதாலேயே இது குறித்து திட்டமிடப்படுவதாக தெரிவித்துள்ள அவர், புகையிரதத் தரைப் பாதையை அமைத்தால் இருதரப்பினருக்கும் அது உதவியாக அமையக்கூடும். ஐரோப்பா உட்பட ஏனைய நாடுகளுடன் வர்த்தகத்திற்கு அது உதவும், இந்திய வர்த்தகர்கள் இலங்கையிலிருந்து நன்மையைப் பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியா முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்றுள்ள நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள முதலாவது பெரும் இரு தரப்பு திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தலைவர், உறுப்பினர்கள் ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆணைக்குழுவில் தங்களுடைய பதவிகளில் இருந்து ராஜினாமா செய்துள்ளனர்.

அவர்கள் தங்களது ராஜினாமா கடிதங்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவிப்பை அடுத்து இந்த ராஜினாமாக்கள் வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதன்படி ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, அதன் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி உடவத்த மற்றும் ஆணையாளர்கள் தங்களின் பதவிகளை ராஜினாமா செய்வதாக எழுத்து மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் அறிவித்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் அதிகாரப்பூர்வ பதவிக்காலம் 2025 மார்ச் மாதத்துடன் நிறைவடைய இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# நவம்பர் முதல் மீனவர்களுக்கு எரிபொருள் சலுகை

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மீனவ சமூகங்களுக்கு ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விசேட எரிபொருள் சலுகையை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாயம், காணி, கால் நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 1 ஆம் திகதி முதல் அடுத்த 6 மாத காலத்துக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைத்து மீன்பிடித் தொழிலை மீட்டெடுப்பது தொடர்பில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## வடமாகாண வூசூ போட்டி

### முதலிடத்தை தனதாக்கியது முல்லை



முல்லைத்தீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வடமாகாண வூசூ போட்டியில் 8தங்கப் பதக்கங்களில் 7 தங்கப் பதக்கங்கள் பெற்று முல்லைத்தீவு முதலாமிடத்தினைப் பெற்றுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டுக்கான வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கு இடையேயான வூசூ போட்டியானது முல்லைத்தீவு மாவட்ட உள்ளக அரங்கில் தேசிய வூசூ பயிற்சியாளர்களின் இருநாள் பயிற்சியுடன் நடைபெற்றது.

இப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள் 5 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலமும் பெண்கள் 2 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என்பன பெற்று முதலாமிடத்தினைத் தமதாக்கிக் கொண்டனர். (நி-299)

## தேசிய மட்ட கராத்தேயில் வடக்கிற்கு வெண்கலம்




விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டியில் வட மாகாணத்திற்கு வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

இப் பதக்கத்தின் வெற்றியாளர் சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன் விஜயராஜ் தமிழ்நிலவன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தேசிய உதைபந்தாட்டம் களமிறங்கும் மகாஜன



தெற்காசிய மகளிர் உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத் தொடரில் பங்குபற்றும் இலங்கைப் பெண்கள் தேசிய அணியில் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட வீராங் கனைகள் மூவர் இடம்பிடித்து வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளனர்.

பாஸ்கரன் சானு, சிவநேசன் தர்மிகா, சுரேந்திரன் கௌரி ஆகியோரே தேசிய அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இத் தொடர் நேபாளத்தில் இம் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3242

**மனோஜ்**




**நிரோபா**




**கிஷாளினி**




**நிதுன்**




**தனோஜ்**




**சரண்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர அரசுக்கு ஆதரவளிக்கத் தயார்

# மொட்டு பகிரங்க அறிவிப்பு



(கொழும்பு) தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கட்சி என்ற வகையில் அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சி என்ற வகையில் எதிர்கால பயணத்தை எந்த வகையிலும் இழுத்தடிக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கோவிட் தொற்றுநோயை எதிர்கொள்வதில், ஒரு கட்சியாகவும், அரசாங்கமாகவும் பொருளாதாரத்தை மறந்து மக்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்தித்து நாங்கள் தவறு செய்தோம். அந்தத் தவறுக்கான பதிலை இதுவரை மக்கள் எமக்கு அளித்துள்ளனர்.

கட்சி என்ற வகையில், அந்த மக்களின் முடிவை நாங்கள் பணிவாகவும் மரியாதையுடனும் ஏற்றுக் கொள்கிறோம்.

இந்த நாட்டில் நேர்மையாக சிந்திக்கும், தேசியம் பற்றி சிந்திக்கும் ஒரே கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளது. அந்த முடிவை ஏற்றுக் கொண்டவுடன், இந்த நாட்டின் எதிர்காலத்திற்கான புதிய திட்டத்தை நேர்மையாக முன்வைப்போம்.

எதிர்வரும் ஆண்டுகளில், நாட்டின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கும் கட்சி என்ற வகையில் நாங்கள் உண்மையாக ஆதரவளிப்போம் என நம்புகிறோம். ஒரு கட்சி என்ற வகையில், அந்த வளர்ச்சிக்கான பயணத்தில் நாங்கள் எந்த வகையிலும் கால்களை பின்னே இழுக்கப் போவதில்லை" என அவர் தெரிவித்தார். (நி)



# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் [NCB] மூலம் நடாத்தப்படும்.
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 16.10.2024 ஆம் திகதி முதல் 29.10.2024 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. **23.10.2024** ஆந் திகதி மு.ப **10.30** மணிக்கு முன் பெறுகைக் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
7. கேள்விகள் **29.10.2024** ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொருட்களுக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். **29.10.2024** ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **[Bid Security]** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| Bid No | Description of work | Estimated Cost (Rs.) In Million without VAT | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/K/RDHS/ L.M/DGH/D/ Q/ 2024/02 | Incurred for the Repair works for Two Storey Doctors Quarters & Three Storey Consultant Doctors Quarter at DGH Kilinochchi. | 11.459 Mn | 90 Days | C6 or C5 (Buildings) | 3,000.00 | 114,590.00 | Till 11.02.2025 |
| Bid No | Description of work | Estimated Cost (Rs.) In Million without VAT | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/K/RDHS/ L.M/DGH/D/ Q/ 2024/03 | Renovation and refurbishment of Male Paramedical Quarters at DGH Kilinochchi. | 9.955 Mn | 90 Days | C6 or C5 (Buildings) | 3,000.00 | 99,550.00 | Till 11.02.2025 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி.**
**T.P 021 228 5932, Fax- 021 228 5931**
**E mail –rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com**

(சி-1401)


# இராசிபலன்

**16.10.2024**
**புரட்டாதி 30, புதன்கிழமை**
**சதுர்த்தசி முன்னிரவு 2.03 மணிவரை**

**உத்திரட்டாதி முன்னிரவு 7.21 மணிவரை**
**சுபநேரம் 4.32-6.02 மணிவரை**
**இராகுகாலம் 12.02-1.32 மணிவரை**

**நடேசர் அபிஷேகம்**
**சந்திராஷ்டமம்: ஆயிலியம், மகம்.**

**வளவன்**




தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




அரசு வழியில் அனுகூலமுண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் விருத்தியுண்டு.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட வருமானம் கைகூடும்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.




தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்கள் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




எதிர்கால முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.




திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புகள் எளிதில் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**முயற்சி செய்தால் எந்த வேலையையும் செய்ய முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு மாதத்திற்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட மீசாலைப் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திறந்த மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்தவகையில் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தலைப்பில் 350-400 சொற்களுக்கு குறையாமல் கட்டுரைப் போட்டியும், "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தொனிப் சித்திரப் போட்டியும் அத்தோடு சிறந்த வீட்டு நூலகத்திற்கான போட்டியும் இடம்பெறவுள்ளன.

வீட்டு நூலகப் போட்டியில் பங்கெடுக்கவுள்ளவர்கள் வீட்டு அலுமாரியில் அல்லது ராக்கையில் 100புத்தகங்களுக்கு குறையாமல் வைத்துப் பராமரிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் நூலகத்தில் தமது விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் 28 ஆம் திகதிக்கு முன்னர் நூலகர், பொது நூலகம், கண்டி வீதி மீசாலை எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ தமது ஆக்கங்களை அனுப்பி வைக்க முடியும் என மீசாலை பொதுநூலகத்தினர் அறிவித்துள்ளனர். (நி-30)

## வடிகால்களின் நிலைமைகளை பார்வையிட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)



ஆறுகால்மடத்தடியில் அமைந்துள்ள குருசுமத வடி வடிகாலின் நிலைமை தொடர்பாகவும் மானிப்பாயில் அமைந்துள்ள கொத்தலாவ வடிகால் நிலைமைகள் தொடர்பாகவும் பதில் அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் நேரடியாக பார்வையிட்டார்.

மேற்படி இரு வடிகால்களினையும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் அரசாங்க அதிபர் பார்வையிட்டு, டெங்கு நோய் வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள், மழைநீர் தேங்கி நிற்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகள், வடிகாலின் நீரோட்டம் மற்றும் துப்பரவு சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக எடுப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார். (நி-33)

## யாழில் இடம்பெற்ற வெள்ளைப்பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

"விழியிலார்க்கு வழி காட்டுவோம் வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிப்போம்" எனும் தொனிப் பொருளில் நேற்றுக் காலை இலங்கை பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் குறித்த நடைபவனி இடம் பெற்றது.

காலை 8.30 மணிக்கு யாழ். வெலிங்டன் சந்தியில் இருந்து ஆரம்பமான நடைபவனி மத்திய பேருந்து நிலையம் வரை முன்னெடுக்கப்பட்டது. பேரணியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், இலங்கை பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையத்தின் உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-33)

## விபத்துக்களை தடுக்க வல்லையில் விசேட நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-வல்லைப் பாலத்தில் அண்மைக் காலங்களாக விபத்துக்கள் அதிகரித்துள்ளதால் எங்கள் உயிர்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ளுவோம் எனும் முயற்சியில் கோப்பாய் பிரதேச செயலகம் இறங்கியுள்ளது.

காலையிலும் மாலையிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் இருவர் சிவப்புக் கொடியுடன் நின்று அவ்வீதியால் பயணிக்கும் வாகன சாரதிகளிடம் மெதுவாகப் பயணிக்குமாறு அன்புடன் கோரி அனுப்பி வைப்பதை காணக் கூடியதாக உள்ளது. (நி)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை அருள்மிகு பூரணைபுட்கலா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய ஜீர்னோத்தாரண புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.12 மணிமுதல் 10 மணிவரை நடைபெறவுள்ளது.

இவ் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கிரியை வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளதுடன் 19,20 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் விஷேட சாந்திப் பூசைகள் நடைபெற்று பிற்பகல் 3 மணிவரை எண்ணெய் சாத்தும் நிகழ்வும் இடம்பெற்று மறு நாள் 21 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி)

## கந்தபுராண விழா 2 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மண்ணில் மாபெரும் கந்தபுராண விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடி வேலர்மண்டபத்தில் மருதங்கேணி ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர் கலாபூஷணம் சி. பசுபதி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவப் புலவர் கலாநிதி ஏ. அனுசாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (நி)



யா/ ஆனைப் பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்களின் "சிறுவர் சந்தை" நிகழ்வு நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

## இளைஞன் மீதான தாக்குதல்; குற்றவாளிகள் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஊடகப் பணியாளர் மீது தாக்குதல் மேற்கொண்ட இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். நகரின் மத்தியில், கஸ்தூரியார் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கும் தொலைக்காட்சி ஒன்றில் தொழிநுட்பவியலாளராகப் பணியாற்றும் நபர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை, பின்னால் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அவரை வழி மறித்து.

ஏன் தாங்கள் முந்தி செல்வதற்கு வழிவிடவில்லை என கேட்டு, தலைக்கவசத்தால் மிக மோசமாகத் தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதல் தொடர்பிலான காணொளி காட்சிகள் கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவாகியுள்ளது.

அதன் அடிப்படையில் பொலிஸார் தாக்குதலாளிகளை இனம்கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரும் தலைமறைவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாண பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஓட்டுமடம் மற்றும் தாவடி பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## காதல் விவகாரம்; மோ.சைக்கிளுக்கு தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள வீடு ஒன்றினுள் அத்துமீறி நுழைந்த கும்பலொன்று வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை சேதப்படுத்திய பின் தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றினில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீ மூட்டி, முச்சக்கர வண்டி மற்றும் பட்டா வாகனம் என்பவற்றின் மீதும் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது. வீட்டில் வசிக்கும் யுவதிக்கும் இளைஞன் ஒருவருக்கும் காதல் தொடர்பு இருந்ததாகவும் தற்போது இருவரும் முரண்பட்டு பிரிந்து உள்ளமையால் காதலனே தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து சந்தேக நபரான காதலனை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த கனடா உயர்ஸ்தானிகர்



(முல்லைத்தீவு)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தார்.

இதன்போது அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரனைச் சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலின்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள். தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள், பிரச்சினைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரினால் கனடா உயர்ஸ்தானிகருக்கு விபரிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் உட்பட மாவட்ட தொழிற்துறை அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (ள)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615671 9**

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**


## பொதுத் தேர்தலின் பின் ஜனாதிபதி இந்தியா விஜயம்

(முல்லைத்தீவு)

பொதுத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இருந்தபோதும் இதுவரையில் அதற்கான தினம் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொதுத் தேர்தலை தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன் வைக்க போதுமான கால அவகாசம் இன்மையினால் தேர்தலை தொடர்ந்து மூன்று மாத காலப் பகுதிக் கான இடைக்கால கணக்கறிக்கை யொன்றை அடுத்த மாதம் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

அதற்கு இடையில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப் படும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார். (நி)


# விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்
9.00-4.00 மணிவரை

**தொடர்பு:- 077 344 3034**


# நகராட்சி மன்றம்-சாவகச்சேரி

**மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் 2025-2028**

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 2025- 2028 ஆம் ஆண்டுகளிற்கான மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. எனவே பொதுமக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான தங்களது முன்மொழிவுகளை முன்னுரிமை அடிப்படையில் 25.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் நகராட்சி மன்றத்தில் நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மின் அஞ்சல் முகவரி :chavauc@gmail.com

(சி-1400)

செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

# தமிழ் மொழிவளர்த்த பெருந்தகைக்கு மணிவிழாவாம் இந் நாள்

(16.10.2024)

திருமதி.
**கலைவாணி நாதசொரூபன்**
(B.A,PGDE,SLTS- I)



**வாழ்த்துக்கவி**

தமிழுக்கு வாணியாய்
மொழிக்கு நாதமாய்
பெயருக்கு
கலைவாணி நாதசொருபனாய்
மான்ஸ் ம.வி க்கு மதிப்பார்ந்த
ஆசானாய்
மாணவருக்கு நல்வழிகாட்டியாய்
ஆசிரியர்களுக்கு நல் ஆலோசகராய்
அளப்பரிய செயலாற்றும்
செயல் வீரியாய்
பதினோராண்டுகள்
பணியாற்றி– இன்று
பணிநிலை தன்னிலே ஓய்வாய்
அகவை தன்னிலே
மணிவிழா காணும் உங்களை
ஓய்வு காலம் சிறப்புற
ஓய்வில்லா உம்மை
இனிதே வாழ்த்துகின்றோம்.




**சேவை விபரம்**

- யா/யூனியன் கல்லூரி- ஆசிரியர் (01.09.1992-25.01.1996)
- வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி- ஆசிரியர் (26.01.1996-20.03.1998)
- யா/யூனியன் கல்லூரி- ஆசிரியர் (21.03.1998-09.02.2014)
- யா/உடுவில் மான்ஸ் ம.வி - பகுதித் தலைவர் (10.02.2014-15.10.2024)

வாழ்த்துவோர்-
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/உடுவில் மான்ஸ் ம.வி. (2304)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1980-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா-25<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: A/L, MA<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14837 | பிறப்பு:1998-இந்து<br>நட்சத் திரம்: சதயம்<br>7 இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: O/L, தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14855 |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத் திரம்: பூராடம்<br>கி.பா-25<br>உயரம் :5'3"<br>தகைமை/தொழில்: BA,English Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14838 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 01<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: HNDE,Teacher(training)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14857 |
| பிறப்பு:1995 -இந்து<br>நட்சத் திரம்: உத்தரட்டாதி<br>12 இல் செவ்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: HNDM,AIE,DIE,English Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14839 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>8 இல் செவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்:BSc ,MSc, Assistant Accountant(London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14862 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்திய எல்லைப் பகுதியை ஆக்கிரமிக்கும் சீனா

### செயற்கைக்கோள் ஆதாரங்களால் பரபரப்பு



(டில்லி)

இந்தியாவின் எல்லைப் பகுதிகளைச் சீனா ஆக்கிரமித்து வருவதாக குற்றசாட்டுகள் இருந்துவரும் நிலையில் தற்போது எல்லையில் பாங்காங் ஏரி அருகே சீன குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்கைக்கோள் ஆதாரங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக கிழக்கு லடாக்கில் இந்திய - சீன எல்லைப் பகுதியில் உள்ள பாங்காங் ஏரியின் (Pangong Lake) குறுக்கே பாலம் ஒன்றையும் சீனா கட்டி முடித்தது. இதில் சீன இராணுவ வாகனங்கள் பயணிக்கும்செயற்கைக்கோள் ஆதாரங்கள் கிடைத்திருந்தன. இந்த நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த மேக்சார் தொழில்நுட்ப நிறுவனம் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படத்தின் படி பான்காங் ஏரியின் வடக்கே, புதிய கிராமம் ஒன்றையே சீனா உருவாக்கியுள்ளது.

எல்லையில் இருந்து 36 கிலோமீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள இந்த கிராமத்தில் 70 நிரந்தர கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 6 - 8 இராணுவ வீரர்கள் தங்க முடியும். மேலும் இந்த பகுதியைச் சுற்றிய இராணுவ கட்டமைப்பையும் சீனா வலுப்படுத்தி வருகிறது. இந்த கிராமத்தை விரிவுபடுத்தும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. இதற்கு முன் பயன்படுத்தப்படாத இந்த பகுதிகளில் மக்களைக் குடியேற்ற சீனா திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும் அவசியம் ஏற்பட்டால் இராணுவ தளமாகவும் சீனா இதைப் பயன்படுத்தும் அபாயம் உள்ளது. பாங்கோங் ஏரி அருகே மொத்தமாக 17 ஹெக்டேர் அளவுக்குச் சீன கட்டுமானங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. சுமார். 4,347 மீற்றர் தூரம் சாலை அமைக்கப்பட்டு கருவிகளும் நிறுவப்பட்டுள்ளது. கடந்த 2020 வாக்கில் பாங்காங் ஏரியின் தெற்கு பகுதியில் சீன இராணுவம் ஊடுருவ முயன்றது குறிப்பிடத்தக்கது. (நி)

# தணிந்தது

# மோடியை ச

# இந்தியா-க



### ஒட்டாவா
### இந்தியா
### பேரையும் வ
### வெளியேற

காலிஸ்தான் பிரிவினைவா
ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூ
18 ஆம் திகதி கனடாவில் வைத்
சுட்டுக் கொலை செய்யப்பட்ட
இந்த கொலையில் இந்திய

# ஈரானுக்கு எதிராக

## தடை விதித்த பிரித்தானியா



(லண்டன்)

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, பிரித்தானியா ஈரானிய தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

பிரித்தானியாவின் வெளியுறவு அலுவலகம் இதனை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

பொருளாதாரத் தடைகள் ஈரானின் இராணுவம், விமானப்படை மற்றும் ஈரானின் பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணை வளர்ச்சியுடன் தொடர்புடைய அமைப்புகளில் ஈடுபட்ட அமைப்புகள் மீது இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் எச்சரிக்கப்பட்ட போதிலும், ஈரானால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் மத்திய கிழக்கில் மேலும் மோசமான நிலையை உருவாக்கியுள்ளதாக பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லாமி தெரிவித்துள்ளார்.

ஈரானால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் மத்திய கிழக்கில் மேலும் மோசமான நிலையை உருவாக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இஸ்ரேல் மீதான அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து, நாங்கள் ஈரானைக் கணக்குப் போட்டு, இந்தச் செயல்களுக்கு உதவியவர்களை அம்பலப்படுத்துகிறோம்." என்று வெளியுறவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈரானைச் சேர்ந்த 6 எரிவாயு நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

அமெரிக்காவின் குறித்த நடவடிக்கையானது இஸ்ரேலுக்கு ஆதரவாக எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் தனது எக்ஸ் வலைதளத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பட்டினியில் கதறப்போகும் காசா

## கொடூரத் திட்டம் தீட்டும் இஸ்ரேல்!



(ஜெருசலேம்)

காசா பகுதியில் இஸ்ரேலின் தாக்குதல் தீவிர மடைந்துள்ள நிலையில் காசாவிற்குள் செல்லும் அத்தியாவசியப் பொருட்களையும் தடுக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஓராண்டிற்கு மேல் போர் தொடரும் நிலையில், சமீப காலங்களில் காசா பகுதியில் இஸ்ரேல் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் வடக்கு காசாவின் ஜபாலியாவில் தங்கள் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அந்த பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததன் காரணமாக அங்கு வசிக்கும் மக்களை தெற்கு நோக்கி நகருமாறு இஸ்ரேல் இராணுவம் வலியுறுத்தியுள்ளது.

மேலும், வடக்கு காசாவின் ஜபாலியாவில் பகுதியை முழுமையாகச் சுற்றி வளைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு, முழுமையாகச் சுற்றி வளைத்து உணவு மற்றும் தண்ணீரின்றி அங்குள்ள ஹமாஸ் போராளிகளை முடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இப்படி அனைத்து மனிதாபிமான உதவிகளையும் முடக்குவது அங்குள்ள பல நூறு அப்பாவி பாலஸ்தீனியர்களையும் பாதிக்கும் என்பதால் இது சர்வதேச அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் நாட்டின் ஓய்வு பெற்ற தளபதிகள் சிலர் இணைந்து இந்த திட்டத்தை நெதன்யாகு மற்றும் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் முன்மொழிந்துள்ளனர்.

அதன்படி வடக்கு காசா பகுதியில் வசிக்கும் பாலஸ்தீனியர்கள் பாதுகாப்பாக வெளியேற ஒரு வாரம் கால அவகாசம் அளிக்கப்படும். அதன் பிறகு அந்த பகுதி மூடப்பட்டு இராணுவ மண்டலமாக அறிவிக்கப்படும்.

மேலும் ஒரு வாரம் கழித்தும் வெளியேறாதவர்கள் அனைவரும் ஹமாஸ் படைகளாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்கு, உணவு, தண்ணீர், மருந்து மற்றும் எரிபொருள் உள்ளிட்ட பொருட்கள் நிறுத்தப்படும்.

மேலும், இராணுவ விதிமுறைகளுக்கு உட்பட்ட அவர்கள் மீது தாக்குதலையும் இஸ்ரேல் நடத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# த
# சீ

(தாய்
தாய்
கடற்பர
2024
ஒத்தின
தொடங்
தாக்குத
வகப்ப
ஒத்தி
இராணு
சீனா
வித்துள்
கத்தை
யையும்
யான
பதாக
சீன
வலைத்
அறிக்
போர்
முனை
தாக்குத
ஒத்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வெடித்தது!

## சந்தித்த 3 நாட்களில்

## கனடா உறவில் விரிசல்

(…வா)

**…யாவில் உள்ள கனடா நாட்டு தூதர்கள் 6 …யும் வரும் 19 ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு …யேற இந்தியா உத்தரவிட்டுள்ளது.**



…வினைவாதி …கடந்த ஜுன் …வில் வைத்து …ய்யப்பட்டார். …இந்திய அரசின் தொடர்பு உள்ளது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்நாட்டின் பாராளுமன்றத்தில் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதனைத்தொடர்ந்து கனடா-இந்தியா உறவில் விரிசல் ஏற்பட்டது. பின்னர் இந்த விவகாரம் சற்று தணிந்த நிலையில் தற்போது மீண்டும் வெடிக்கத்தொடங்கியுள்ளது. கடந்த 11 ஆம் திகதி லாவோஸ் நாட்டில் நடந்த ஆசியான் மாநாட்டில் பிரதமர் மோடியும் ஜஸ்டின் ட்ரூடோவும் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது. இந்த சந்திப்பில் கனடா மக்களின் பாதுகாப்பு குறித்து மோடியிடம் பேசியதாக ட்ரூடோ தெரிவித்தார்.

ஆனால் அவர் அப்படி எதுவும் மோடியிடம் பேசவில்லை என்று இந்தியா மறுப்பு தெரிவித்தது. இதனைத்தொடர்ந்து கனடாவில் இந்திய அரசின் வன்முறை பிரசாரத்தின் ஒரு பகுதியாக இந்திய தூதர்கள் பணியாற்றினர் என்பதற்கான சான்றுகளை கனடா பொலிஸார் சேகரித்துள்ளதாகக் கனடா சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இது நிலைமையை இன்னும் மோசமடைய வைத்துள்ளது. அதாவது, கனடாவில் உள்ள இந்திய தூதர்களை திரும்பப்பெறுவதாக இந்தியா அதிரடி அறிவிப்பு ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது. மேலும் இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதர்கள் 6 பேரையும் வரும் 19 ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறவும் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

நிலைமை இப்படி இருக்க இந்திய அரசின் இந்த நடவடிக்கை குறித்து ஜஸ்டின் ட்ரூடோ விமர்சித்துள்ளார். இதுதொடர்பாக ட்ரூடோ ஒட்டாவாவில் செய்தியாளர் சந்திப்பின்போது பேசியதாவது, இந்தியாவின் செயல்கள் ஏற்றுக்கொள்ளமுடியாததாக உள்ளது.

கனேடிய மண்ணில் கனேடியர்களுக்கு எதிரான கொலை, வன்முறை சம்பவங்கள் என பல்வேறு குற்றச்செயலைகளை ஆதரித்து இந்திய அரசு மிகப்பெரிய தவறை செய்துவிட்டது. இந்த குற்றங்களுக்கு இந்திய அரசு உடந்தையாக இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளது. இதுதொடர்பான ஆதாரங்களை இந்திய வெளியுறவு அதிகாரிகளை எங்கள் நாட்டின் தூதர்கள் 6 பேரும் நேரில் சந்தித்து வழங்கினர். ஆனாலும் இந்திய அரசு இந்த விவகாரத்தில் ஒத்துழைக்க மறுப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் இந்த பிரச்சினை தொடர்பாக பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரிடம் ட்ரூடோ விரிவாக பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் கனடா அரசு தெரிவித்துள்ளது. (நி)

# தாய்வானைச் சுற்றி சீனா போர் ஒத்திகை

(தாய்பே)

தாய்வானை சுற்றியுள்ள கடற்பரப்பில் ஜாயின்ட் ஸ்வார்ட் 2024பி என்ற பெயரில் போர் ஒத்திகையை சீனா திடீரென தொடங்கியுள்ளது. தாய்வான் மீது தாக்குதல் நடத்துவதை உருவகப்படுத்தி, 9 இடங்களில் ஒத்திகை நடத்தப்படுவதாக சீன இராணுவம் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ள தாய்வான், ஜனநாயகத்தையும் இறையாண்மையையும் உறுதி செய்ய தேவையான படைகளை அனுப்பியிருப்பதாக கூறியுள்ளது.

சீன இராணுவம் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில் போர்க்கப்பல்களும், போர் விமானங்களும் பல முனைகளில் இருந்தும் கூட்டு தாக்குதல் நடத்துவதற்கான ஒத்திகையில் ஈடுபட்டிருப்பதாகவும் போருக்கான தயார் நிலை, முக்கிய துறைமுகங்களை முற்றுகையிடுவது, கடல் மற்றும் தரை வழித் தாக்குதல்கள் போன்றவற்றை முன்னிறுத்தி இந்த ஒத்திகை நடப்பதாக' அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த பயிற்சிகளை "பிரிவினைவாத சக்திகளுக்கு எதிரான வலுவான தடுப்பு" மற்றும் "தேசிய இறையாண்மையை பாதுகாக்க மற்றும் தேசிய ஒற்றுமையை பேணுவதற்கான சட்டபூர்வமான மற்றும் தேவையான நடவடிக்கை" என்று சீன இராணுவம் விவரிக்கிறது.

தாய்வானின் இறை யாண்மையை சீனா அங்கீ கரிக்கவில்லை என்பதும், தாய்வான் தனக்கு சொந்தமானது என்று சீனா கூறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)



# பசியால் வாடும் 700 மில்லியன் மக்கள்

உலகளவில், 700 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தினமும் பசியால் அவதிப்படுகின்றனர். மேலும் கிட்டத்தட்ட 3 பில்லியன் மக்கள் ஆரோக்கியமான உணவை வாங்க முடியவில்லை என உலக பசிக் குறியீட்டு மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை போன்ற அண்டை நாடுகள் தங்களது தரவரிசையை மேம்படுத்தியுள்ள நிலையில், இந்தியா தொடர்ந்து "பயங்கரமான" பிரிவில் நீடித்து வருகிறது.

பசியின்மை, குழந்தை வளர்ச்சி குறைபாடு மற்றும் அதிக குழந்தை இறப்பு விகிதங்கள் போன்ற காரணிகளே இதற்கு காரணம் என்று அறிக்கை குறிப்பிடுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான உலக பசிக் குறியீடு வெளியிடப்பட்டுள்ள நிலையில்,

அதில் இந்தியா 105 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இது தீவிரமாக கவனிக்கப்பட வேண்டிய பிரிவுக்குள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கான்சர்ன் வேர்ல்டு வைடு மற்றும் வெல்டங்கர் ஹில்ஃபே ஆகிய இரண்டு அமைப்புகளால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை, பல நாடுகளில் நிலவும் தொடர்ச்சியான பசி பிரச்சினையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த உலக பசிக் குறியீடு மதிப்பீடானது, பசியின்மை, குழந்தை இறப்பு மற்றும் குழந்தை வளர்ச்சி குறைபாடு ஆகியவற்றை அளவிடும் GHI, நாடுகளை 0 முதல் 100 வரையிலான அளவில் வரிசைப்படுத்துகிறது.

காசா, சூடான் மற்றும் காங்கோ ஜனநாயக குடியரசு போன்ற பகுதிகளில் ஏற்பட்ட போர்கள் உணவு நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளன. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை; காலக்கெடு விதித்த கம்மன்பில

**(கொழும்பு)**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இது வரை வெளியிடப்படாத இரண்டு அறிக்கைகளையும் ஜனாதிபதி இன்னும் 7 நாட்களில் வெளியிடா விட்டால் அவற்றை தான் வெளியிடுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

மேலும் குறித்த அறிக்கைகளில் எந்தவொரு பக்கமும் காணாமல் போகவில்லை என்றும் எந்தவொரு விசாரணை அறிக்கையும் மாயமாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நீர் கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்திற்கு அண்மையில் சென்றிருந்தார். அவர் வெறுங்கையுடன்தான் அங்கு சென்றிருந்தார்.

எனினும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரை வெளிவராத அறிக்கைகள் இரண்டை அவர் அங்கு கொண்டு சென்றிருக்கலாம் என்று தெரிவித்திருந்தேன். இனியும் தாமதிக்காமல் அந்த இரண்டு அறிக்கைகளையும் ஜனாதிபதி வெளியிட வேண்டும்.

எனினும் அமைச்சரவைப்



பேச்சாளரான விஜித ஹேரத் சில அறிக்கைகளின் பக்கங்கள் குறைவாகக் காணப்படுவதாகவும் சில அறிக்கைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் இதுதொடர்பாக தாங்கள் விசாரணை நடத்துவதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

எனவே, ஜனாதிபதி இன்னும் 7 நாட்களில் இதுவரை வெளியிடப்படாத ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இந்த இரண்டு விசாரணை அறிக்கைகளையும் வெளியிட வேண்டும் என தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 130 | 120 | 80-140 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 300-350 | 300 |
| தக்காளி | 300 | 300 | 350 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 240 | 200 | 120-200 | 200 |
| கோவா | 250 | 200 | 250 | 280 | 300 |
| கரட் | 200 | 200 | 200 | 260 | 200 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 100 |
| புடோல் | 100 | 140 | 150 | 180 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 150 | 100-150 | 300 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 250 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 350-400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 120-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 250-350 | 400 |
| லீக்ஸ் | 200 | 280 | 280 | 350 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 180 | 120-140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 120 | 300 | 80-150 | 300 |
| போஞ்சி | 450 | 500 | 420 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 130 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 350-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 110 | 90-170 | 100-150 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 550 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 150 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 50 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 242



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## மரபு நிலையா? சூழ்நிலையா?

ஒரு மனிதன் நல்லவனா இருக்கிறதுக்கும் கெட்டவனாக இருக்கிறதுக்கும் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

பரம்பரைக் குணம் தான் இதற்குக் காரணம் என்று சொல்லுவதா? இல்லை வளர்ந்த சூழ்நிலை தான் அதற்கு காரணம் என்று சொல்வதா?

இது தான் இன்றைக்குத் தகவல்.

சில இளைஞர்களைப் பார்த்தால் உடனே ஏம்பா நீ இன்னாருடைய மகனா? என்று கேட்கின்றோம். அவனும் ஆமாம் என்கிறான் இது எப்படி?

முகச்சாயல் அதைக் காட்டிக் கொடுத்து விடும். ஒரு பையன் நடந்து போகின்ற முறை அவனுடைய உடல்வாகு இதை எல்லாம் வைத்துக் கூட அவன் இன்னாருடைய பிள்ளை தான் என்பதை ஓரளவுக்கு யூகித்துக் கொள்ள முடிகிறது.

ஒருவருடைய முக அமைப்பு, கண்களின் நிறம், தோலின் நிறம், தலைமுடி, உயரம் இப்படிப் பல விடயங்களைத் தீர்மானிப்பது அவருடைய பெற்றோரிடம் இருந்து பெறப்படுகின்ற மரபுக் கூறுகள் தான்.

இதைத் தான் ஆங்கிலத்தில் ஜீன்கள் என்று சொல்லுகிறார்கள். உயிரியல் செயல்கள், அமினோ அமிலங்கள், சுரப்பிகள் இதனுடைய செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக்கூறுகள் தான்.

இப்படியெல்லாம் இருக்கிறதனாலே ஒருவருடைய நடத்தைக்கும் பரம்பரை தான் காரணம் என்று ஒரே படியாக அச்சிட முடியாது.

சூழ்நிலையினுடைய முக்கியத்துவம் பற்றியும் பலபேர் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள்.

அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால்?

ஒருவருடைய புத்திசாலித்தனம், உணர்ச்சி வசப்படுகின்ற தன்மை, கோபம், சுலபமாக நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல், சோர்வுத்தன்மை இதெல்லாம் பெற்றோர்களுடைய வசதி, கல்வி,சூழ்நிலை, வளர்ப்பு முறை இதைப் பொறுத்து அமைகிறது என்கிறார்கள்.

அப்பா மாதிரி பிள்ளை நடந்து கொள்கின்றது என்றால் அதற்கு பரம்பரைக் குணம் காரணமில்லை, பார்த்துக் கற்றுக் கொள்வது தான் காரணம் என்பது இவர்களுடைய வாதம்.

கோட்டஸ்மன் என்று ஒரு ஆராய்ச்சியாளர். இவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒருதாய் வயிற்றிலே பிறந்த இரட்டைப் பிள்ளைகள். அவர்களைப்பிரித்து வெவ்வேறு சூழ்நிலையிலே வளர்த்தார். அப்படி வளர்த்ததன் மூலமாகவே இரண்டு பேருக்கும் மாறுபட்ட குணம், திறமை இருக்கிற மாதிரி உருவாக்கிவிட்டாராம். அவன் ஒரு மாதிரியும் இவன் ஒரு மாதிரியும் ஆகிவிட்டார்கள்.

வான்டன் பெர்க் என்று ஒரு ஆராய்ச்சியாளர். இவர் என்ன செய்தார் என்றால் குழந்தைகளை மூன்று வகையாகப் பிரித்தார்.

கலகலப்பாக இருக்கிறவர்கள் ஒருவகை, தனிமையாக இருக்க விரும்புபவர்கள் ஒரு வகை, உணர்ச்சி வசப்படுகின்றவர்கள் ஒரு வகை. பாரம்பரியச் செல்வாக்குத்தான் இந்த வகைகளுக்கு காரணம் என்று அடித்து சொல்லியிருக்கிறார் அவர்.

1963 இலே 31 000 குழந்தைகளைப் பரிசோதனை செய்து பார்த்து விட்டு ஒரு முடிவை சொல்லியிருக்கிறார்கள். அது என்ன என்றால்?

ஒரு குழந்தையினுடைய நடத்தையிலே பாரம்பரியத்தினுடைய பங்கு கொஞ்சம் தான் என்று சொல்கிறார்கள். ஆகக் கூடியது சூழ்நிலையினுடைய பங்கு அதிகம் என்று தெரிகிறது.

ஒரு மனிதக் குரங்கை ஒரு குழந்தையோடு சேர்த்து வளர்த்துப் பார்த்தார்களாம். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும் பாசமாகவும் இருக்கக் கற்றுக்கொண்டதாம்.

குணத்தை மட்டும் தான் என்று இல்லை உடம்பு வாகையைக் கூட சூழ்நிலை மாற்றிவிடும் போல இருக்கிறது.

ஜப்பான் நாட்டுக்காரர்கள் உயரம் குறைவாக உள்ளவர்கள். அவர்களிலே கொஞ்சப் பேர் அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே இருந்தார்களாம்.

இரண்டு, மூன்று தலைமுறைக்கு அப்புறம் பார்த்தால் அந்த ஜப்பான் நாட்டவர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்து இருக்கிறார்களாம்.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது நமது பரம்பரையை விட நமது சூழ்நிலை தான் மிகவும் முக்கியம் என்று தோன்றுகிறது.

இந்தக் காலத்துப் பையன் தன்னுடைய அப்பாவிடம் போய். "அப்பா என்னைப் பொறுத்த வரைக்கும் பரம்பரையிலேயும் நம்பிக்கை இல்லை, சூழ்நிலையிலேயும் நம்பிக்கை இல்லை".

எப்படிடா என்று கேட்டார் அப்பா.

"ஒரு பையன் கணக்கிலே நூற்றுக்கு நூறு புள்ளி வாங்கியிருந்தான். அவனுடைய அப்பா படிக்கிற போது கணக்கிலே அவர் 6 புள்ளி தான் வாங்கினாராம். அந்த அப்பா மாதிரியே இந்த பையனும் இருந்தால் பாஸாகி இருக்கவே முடியாதே!" என்றான்.

"அது சரி ஆறு புள்ளி வாங்கின அந்த அப்பா யாருடா? என்றார்"

"நீ தான்!" என்றான் பையன்.

"எப்படிடா தெரிந்தது" என்றார்.

"அம்மா சொன்னாள்!" என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பாவனைகளால் அதிகரிக்கும் குடும்ப வன்முறைகள்

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி இராமநாதபுரம் மற்றும் கல்மடு நகர் ஆகிய பகுதிகளில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் சிறுவர்கள், பெண்கள் மீதான துன்புறுத்தல் சம்பவங்கள் அதிக அளவிலே பதிவாகி வருவதாகப் பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராமநாதபுரம் புதுக்காடு, கல்மடு நகர் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி மற்றும் போதைப்பொருள் பாவனை என்பன அண்மை நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தப் போக்கை காட்டி வருவதாகப் பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக இராமநாதபுரம் பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நான்கு வயதுச் சிறுமி ஒருவரை மதுபோதையில் இருந்த அவரது தந்தை கடுமையாகத் தாக்கியதுடன் குறித்த சிறுமியை நீர்த் தொட்டிக்குள் தூக்கி வீசிய சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளதுடன் சிறுமியை தாக்கிய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த பகுதிகளில் அதிக அளவிலே சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (நி-315)

# வெண்பிரம்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி



(தருமபுரம்)

உலக வெண்பிரம்பு பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று கிளி நொச்சியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வுப் பேரணி 155 ஆம் கட்டையிலுள்ள விழிப்புலனற்றோர் சங்கம் வரை முன்னெடுக்கப்பட்டது. குறித்த பேரணியில் விழிப்புலனற்றோர் மற்றும் அவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர். (நி-316

# கொள்கைகளினாலும் அரசியலினாலும் அலைச்சலுக்குள்ளாகும் நம்மவர் விவசாயம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வரலாற்றை திருப்பிப் போட்ட மக்களின் ஏகோபித்த முடிவாக புதிய ஜனாதிபதியின் வருகை அமைந்திருக்கின்றது என்பதற்கும் மேலாக மக்கள் தாமாக மாற்றமொன்றை செய்து அதிலிருந்து தமது வாழ்வாதாரத்தின் முன்னேற்றத்திற்கு மாற்றம் ஏதும் வராதா என ஏங்கியிருக்கின்றனர்.

விவசாய பெருமக்கள், சிறு தொழில் செய்வோர், இன்னும் வாழ்வாதாரத்தை தக்க வைக்க பாடுபடும் அனைத்து மக்களும் வருகின்ற மாற்றம் தமக்கு சாதகமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் செய்யப்பட்ட மாற்றத்தை வருகின்ற பொதுத் தேர்தலிலும் அந்த ஆணை மேலும் இறுக்கமாக தரப்பட வேண்டுமென்ற ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் மக்களின் எதிர்பார்ப்பும் ஒன்றிணைந்திருக்கின்றதாக தென்படுகின்றது.

ஆட்சி முழுவதுமாக மாற்றம் பெற்று ஊழலற்ற நியாயமான நாட்டின் அபிவிருத்திக்கான தூரநோக்கை நோக்கிய அரசாங்கம் வேண்டும் என்னும் முடிவில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்துள்ளமை நாட்டு நடப்புக்களை பார்க்கின்றபோது வெளிப்படையாக தெரிகின்றது. பொதுத் தேர்தலில் பெறப்படும் வெற்றி ஜனாதிபதியின் திட்டங்களை அமுல்படுத்த அவசியமாகின்றது என்பதனை பொதுமக்கள் தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றனர்.

விவசாயத்தில் பயன்படுத்தப்படும் பசளைக்கான மானியம் மற்றும் மீனவர்களுக்கான மானியம் என்பன ஒரு ஆரம்ப மாற்றமாக காண்கின்றனர். இப்போது எமக்கு அவசியம் தேவையான பொருளாதார மீட்சி விரைந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதோடு பொருட்களின் விலையதிகரிப்பில் தளர்வு, எப்படியிருந்தோமோ அந்த நிலைக்காக வாவது வந்துவிட்டால் போதும் என்ற அங்கலாய்ப்பு நிச்சயம் இந்த பொதுத் தேர்தலிலும் வெளித்தெரியும்.

குறிப்பாக பலவித ஐயப்பாடுகளுடன் எவருக்கு வாக்களிப்பது என குழம்பிய நிலையில் சென்ற தேர்தலில் வாக்களிக்காதவர்கள் நிச்சயமாக இப்பொதுத் தேர்தலில் தமது வாக்குகளை ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட மாற்றத்திற்கு உறுதுணையாக்க முன்வருவர் என்பதும் பலரது கருத்துக்கள் கட்டியங்கூறி நிற்கின்றன.

இம்முறை ஏற்படுத்தப்பட்ட மாற்றம் இலங்கை அரசியலில் மிகவும் முக்கியமானதாகும். தென்பகுதியில் ஆட்சிசெய்த

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



பழமைவாத் கட்சிகள் தமக்கிடையில் பிளவுபட்டுக் கொண்டது அரசியல் சித்தாந்தங்களுக்குள் சாதாரணமான விடயமாக பார்க்கப்பட்டாலும் முன்னைய காலங்களில் பெரும்பான்மை வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளில் கோலோச்சியவர்கள் இம்முறை பலத்த அடிவாங்கியது எவரும் எவருக்கும் சொந்தமில்லை என்பதனை பொது மக்கள் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றனர். நல்ல ஆட்சி, ஊழலற்ற நேர்மையான அரசியல், மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டங்கள், அபிவிருத்தியின் உண்மை நிலை, இவற்றுக்கும் மேலாக எமது விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி, ஏற்றுமதிக்கான முனைப்பு இவற்றுடன் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கான விரைந்த தீர்வு, பொருட்களின் விலை குறைப்பு, வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள் என மக்களின் தேவைகள் சீர்படுத்தப்பட வேண்டும் என்னும் நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியதன் ஆரம்பம் எனலாம். அதிலும் நேர்மைக்கும் திறமைக்கும் அனுபவத்திற்கும் தெரிவில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட செய்திகள் மக்களை வந்தடையத் தொடங்கியிருப்பதும் மாற்றத்தின் இறுக்கத்தை மேலும் வலுவடையச் செய்திருக்கின்றது.

இவ்வளவும் இதில் எழுதுவதற்கு காரணமுண்டு ஏனெனில் இதுவரை ஒவ்வொரு அரசாங்கங்களும் கடைப்பிடித்த விவசாயக் கொள்கைகள் அது சார்ந்து நடந்து முடிந்த அரசியல் செயல் ரூபங்கள் அனைத்தும் விவசாயியையும் விவசாயத்தையும் ஏதோவொரு வகையில் பாதித்திருக்கின்றன என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. சின்ன வெங்காயம் அறுவடைக்குத் தயாராகும் போது வெங்காயத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கொள்கை முடிவுகள் நிச்சயமாக உற்பத்தியாளனை பெரிதளவில் பாதித்திருந்தன. வெங்காயம் மட்டுமல்ல உருளைக்கிழங்கு இன்னும் இன்னோரன்ன பொருட்கள் அறுவடை காலத்தில் இறக்குமதி செய்து நுகர்வோரே விலை தளம்பலிலிருந்து காப்பாற்றிவிட்டோம் என மார்தட்டியவர்கள் உற்பத்தியாளனையும் அவன்படும் வேதனையையும் கணக்கிலெடுக்கவில்லை. அதனால் தொடர்ச்சியாக உற்பத்தியினளவில் தளம்பல்கள் பெரியளவில் ஏற்படக் காரணமாகியது. ஆதாயம் ஏதுமில்லாமல் உற்பத்தி செய்து விவசாயி நட்டப்படும் நிலைக்கு கொண்டு வந்தவர்கள் அவர்களுக்கான பரிந்துரையையும் மாற்று வழிகளையும் பரிந்துரைக்காமலேயே சென்றுவிட்டனர்.

எமது விவசாயக் கொள்கையில் இருக்கின்ற தளர்வு, விவசாயியை மையப்படுத்தியதான உற்பத்தி அதிகரிப்பு, நுகர்வோரின் தன்மை, அவர்களுக்கான தேவைகள் என்பன விலாவாரியாக அலசியாராய்ந்தால் தான் இம்முறை உற்பத்தியாகும் பொருட்களை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் செல்ல வழி பிறக்கும். கடந்த காலங்களில் நீண்ட பாரம்பரியத்தினூடாக சாத்தியமாக கூடிய விடயங்களில் அதிக அக்கறை கொடுக்கப்படவில்லை என்னும் கூற்று இங்கு ஆழமாக கலந்துரையாடப்படல் வேண்டும். 1999 களில் எமது நெற்தேவைக்கு எம்மால் உற்பத்தி செய்ய முடிந்த செய்தி அனைவரினதும் கவனத்தையீர்த்தது.

அனைத்து மக்களும் முயற்சித்தால் இவ்வாறான விருத்தியை எய்த முடியும் என்பதனை செய்தும் காட்டியிருந்தனர். ஆனால் அடுத்த வருடமே இது சாத்தியமற்றதாக உணர வேண்டியதாயிற்று.

எமது மனித வளம் அதனது ஆளுமை, உற்பத்தியில் நாம் எட்டக்கூடிய அளவு, எமது மக்களுக்கான உணவை நாம் உற்பத்தி செய்யும் வல்லமை இவையனைத்தும் நெல் உற்பத்தியில் நடந்தது.

என்றால் ஏன் அதனது உற்பத்தி தொடர்ந்து வந்த வருடங்களில் ஏற்படுத்தப்படவில்லை. இவை அனைத்திற்குமான பதிலை நிச்சயமாக நாம் கண்டுபிடித்தே ஆக வேண்டும். மாற்றம் என்பது விரைந்து ஏற்படுத்துவதல்ல. மாற்றத்தின் பலன்களை மக்கள் தொடர்ந்து அனுபவிக்கக் கூடியதாக அதனை பேண்தகு நிலையில் பேணப்படல் வேண்டும்.

தொடர்ந்து வரும் ஆண்டுகளில் இந்த மாற்றத்தின் பலன்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக விருத்தியடைய வேண்டும். அதனை விவசாய உற்பத்தியின் அபிவிருத்தியில் முன்னோக்கி நகர்த்தப்படல் வேண்டும். மாற்றமடையாத பொருளாதாரத்திலிருந்து வளர்ச்சியடையும் பொருளாதாரத்திற்கு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லுதல் அவசியமாகின்றது.

இவ்வாறான பொருளாதார வளர்ச்சியில் நிதி முகாமைத்துவம், மாறறுச்சக்தியின் பயன்பாடு, உணவு உற்பத்தி, விவசாய அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், காலநிலை மாற்றம் மற்றும் சூழல் அதாவது சுற்றுச்சூழல் என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 607





பொன்னியின் செல்வரிடம் அவளுடைய உள்ளம் சென்றது அப்படியொன்றும் பிசகான விடயமில்லையென்றும் நடக்கமுடியாத காரியமும் அல்லவென்றும் குறிப்பாக உணர்த்தி வந்தாள். குடந்தை ஜோதிடர் வானதிக்குப் பிறக்கப்போகும் மகனைப் பற்றிக் கூறியது, அவளுடைய உள்ளக் கனலுக்குத் தூபம் போட்டு வளர்த்தது. அவளுடைய மனோராஜ்யம் மேலும் விரிவடைந்து கொண்டே வந்தது. மனச்சோர்வும் குதூகலமும் மேலும் துரிதமாக மாறி மாறி ஏற்பட்டன. ஏக்கத்தினால் ஏற்பட்ட மனவேதனை பொறுக்க முடியாமலிருந்தது போல், மகிழ்ச்சியினால் ஏற்பட்ட கிளர்ச்சியையும் அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இரண்டும் மிதமிஞ்சிப் போன போது மயக்கம் போட்டு விழுந்தாள் இயற்கையருளிய இந்த மயக்கமருந்து சாதனத்தினால் அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

தஞ்சைக்குச் சென்றிருந்த போது வானதி பார்த்த பராந்தகச் சக்கரவர்த்தி நாடக மும் அன்றிரவு அவள் கேட்ட அபயக் குரலும், கண்ட பயங்கரக் காட்சியும் அவளுடைய மனக்குழப்பத்தை அதிகமாக்கின. கொடும்பாளூர் வம்சத்துக்கும், பழுவூர் சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த தீராத பகையின் அளவை அவள் அன்று நன்கு அறிந்து கொண்டாள். பழுவூர்க்காரர்கள் சோழ நாட்டில் அப்போது அடைந்திருந்த செல்வாக்கின் அளவையும் தெரிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழிவர்மர் விடயத்தில் தன் மனோரதம் ஈடேறப் பழுவேட்டரையர்கள் அனுமதிப்பார்களா? அவர்கள் அனுமதித்தாலும் அவர்கள் வீட்டுப் பெண்கள் சும்மாயிருப்பார்களா? பழுவூர் இளையராணி சம்மதிப்பாளா? அவளுடைய செல்வாக்கும் சக்தியும் உலகம் அறிந்தவை. நந்தினியை நினைக்கும் போதெல்லாம் அழகிய நாகபாம்பின் நினைவு வானதிக்கு வந்தது. இளையபிராட்டியின் பேரில் அவளுடைய பகைமையைப்பற்றி அறிந்து கொண்டிருந்தாள். அது தன் பேரிலும் பாயும் அல்லவா? ஏன், பொன்னியின் செல்வரையே அந்த விஷநாகம் தீண்டினாலும் தீண்டக்கூடும்! நள்ளிரவில் நோயாகப் படுத்திருக்கும் சக்கரவர்த்தியின் முன்னால் நந்தினியையொத்த வடிவம் ஒன்று நின்றதே! அது உண்மையில் நந்தினிதானா? சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பீதி நிறைந்த குரலில் ஓலமிட்ட காரணம் என்ன? இளையபிராட்டி இதைப் பற்றியெல்லாம் ஏன் தன்னிடம் எதுவும் பேசுவதற்கு மறுக்கிறாள்! ஆமாம்! இளையபிராட்டியின் மனமும் மாறிப் போயிருக்கிறது. தன்னிடம் முன்பெல்லாம் போல் அவ்வளவு கலகலப்பாகப் பேசுவதில்லை. அடிக்கடி தன்னை விட்டு விட்டுத் தனிமையை நாடிப் போய்விடுகிறார். அவரை ஏதோ பெருங்கவலை பீடித்திருக்கிறது. ஒரு வேளை பொன்னியின் செல்வரைப் பற்றிய கவலைதானோ என்னவோ? அதனாலேதான் தன்னிடம் அதைப்பற்றிச் சொல்வதற்கு மறுக்கிறார் போலும்!

இன்றைக்குக்கூடத் திடீரென்று இளையபிராட்டி காணாமல் போய்விட்டார். அவர் இல்லாத சமயங்களில் இந்தப் பெண்கள் என்ன பாடுபடுத்துகிறார்கள்? என்ன கொட்டம் அடிக்கிறார்கள்? கவலையென்பதை அறியாதவர்கள். எது எப்படிப் போனாலும் அவர்களுடைய கும்மாளத்துக்குக் குறைவு ஒன்றும் கிடையாது. அவர்களுடைய கேலிப் பேசுக்களை வானதியினால் எப்போதுமே சகித்து கொள்ள முடிவதில்லை. அதுவும் இந்த இரண்டு மூன்று தினங்களாக ஒரே சோகக் கடலில் வானதி ஆழ்ந்திருந்தபடியால் அவர்களுடைய வீண் பேச்சுக்கள் அவளுடைய காதில் நாராசமாக விழுந்தன.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### உயிரினங்கள் பற்றிய சில தகவல்கள்

மனிதனுடன் உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவை மனிதனை விட சில விடயங்களில் அதிக ஆற்றல் மிக்கவையாக இருக்கும். அவற்றைப் பற்றி பார்ப்போம்.

- சீல்கள் மணிக்கு 23 கி.மீ வேகத்தில் நீந்தும்.
- அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல்புறாக்கள் நீரில் நீந்திக்கொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு இருபது தடவைகள் கொத்தும்.
- உலகில் முதுகெலும்புடன் தோன்றிய மிருகம் மீன்
- உலகிலேயே அதிக குரங்குகள் வாழும் நாடு பிரேசில்
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ வரை பறக்கும் திறன் படைத்தது.
- ராஜஸ்தான் பறவைகள் 374 இனங்கள் இருக்கின்றன.
- இந்தியாவில் இந்திராகாந்தி சரணாலயத்தில் மட்டும் எறும்பு தின்னி உள்ளது.

தி. [illegible],
யா/கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயம்.

## அறிவியல் துறைகளின் தந்தையர்கள்

கணக்கியல்- லூக்கா பெசியோலி

கணனி - சாள்ஸ் பபேஜ்

மின்சாரம் - மைக்கல் ஃபாரடே

அரசியல் - அரிஸ்டோட்டில்

சமூகவியல் - மக்ஸ்வெபர்ஹொம்ரே



அதிஷ்ரிதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மனிதர்களின் அனுபவத்தைக் கூர்ந்து கேட்கும் ஒவ்வொரு முறையும் எனது பணிவு அதிகரிக்கிறது.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காற்றாலைத் திட்ட மறுபரிசீலனை இந்தியாவை பகைக்கும் அஸ்திரம்

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அவருக்கான வாழ்த்துச் செய்தியை முதலில் தெரிவித்தவர் இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா என்பது அனைவரும் அறிந்ததே.

இதுதவிர, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அந்தச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

அதாவது இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையின் ஆட்சித் தரப்பு தன்னைக் கடந்து தனது பகைமை நாடுகளுடன் ஊடாடலை வைத்திருக்கக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக உள்ளது.

பொதுவில் இந்த இயல்பு பிராந்திய ஆதிக்கம் கொண்ட நாடுகளிடம் இருக்கவே செய்யும்.

அந்தவகையில், இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் யார் அமர்வது தமக்குச் சாதகம் என்ற கோணத்தில் இந்தியா சிந்திப்பது தவிர்க்க முடியாததே.

இதை நாம் கூறும்போது, இலங்கையை உற்று நோக்குகின்ற ஏனைய நாடுகளின் நிலைப்பாடும் இதுவே.

இதன் அடிப்படையில் நோக்கும்போது, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவதை இந்தியா விரும்பியிருந்தது என ஊகிக்க முடியும்.

எனினும் ஒரு நாட்டின் இறையாண்மையில் தலையிடுவது நல்லதல்ல என்ற ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பதிலும் இந்தியா அதீத கருசனை கொண்டிருந்தது.

இங்குதான் எவரும் எதிர்பாராத வகையில் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகிறார்.

அநுரவின் இந்த வெற்றி என்பது எந்த வகையிலும் இந்தியாவுக்கு எதிரானதல்ல.

மாறாக, இலங்கை அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும். அப்போதுதான் ஊழல் மோசடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும் என்ற ஒரே நோக்கில் சிந்தித்த மக்களின் தெரிவாக அநுர குமார திஸாநாயக்க இருந்தார். இதுவே உண்மை.

ஆக, இந்தியாவை எதிர்க்க வேண்டும் என்ற சிந்தனை அநுரவைத் தெரிவு செய்த மக்களிடம் இம்மியும் இருக்கவில்லை.

இங்குதான் இலங்கை ஜனாதிபதி அநுரவை தனது நட்புக்குரியவராக ஆக்க வேண்டும் என இந்தியா முடிவு செய்கிறது.

அதன் ஒரு வியூகமே இந்தியாவுக்கு வாருங்கள் என இந்திய வெளிவிவகார அமைசர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரவுக்கு விடுத்த அழைப்பாகும்.

எனினும் பொதுத் தேர்தல் காரணமாக ஜனாதிபதி அநுரவின் வெளிநாட்டுப் பயணங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இருந்தும் ஏலவே இலங்கை அரசாங்கமும் அதானி குழுமமும் செய்து கொண்ட காற்றாலை ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவை மீள்பரிசீலனை செய்யும் என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியிருப்பது தான் இங்கு விசேட கவனத்துக்கு உட்படுகிறது.

அதாவது காற்றாலைத் திட்டம் தொடர்பில் அமைச்சரவையின் மறுபரிசீலனை என்னவாக இருக்கும் என்பதை இந்தியா மிகவும் கூர்மையாகக் கவனிக்கும் என்பதும் அதிலிருந்துதான் எதிர்காலத்தில் இலங்கை - இந்திய உறவு அமையும் என்பதும் இங்கு எதிர்வுகூறப்படக்கூடியதாகும்.

## மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில்
# அரச உத்தியோகத்தர்களுக்கு அர்ப்பணிப்பு அவசியம் - ஜனாதிபதி

(கொழும்பு)

பொது மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு அர்ப்பணிப்பு அவசியம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வலுசக்தி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதன்படி ஏனைய நாடுகளில் வலுசக்தித் துறைக்கு உயர்ந்த நிலை வழங்கப்பட்டுள்ளதைப் போன்று இலங்கையிலும் வலுசக்தித் துறைக்கு முன்னணி இடம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வலுசக்தி அமைச்சு என்பது நிதி வருமானங்களைப் பெறும் அமைச்சு எனவும், அதிக வருமானம் கிடைக்கும் போது முறைகேடுகள் இடம்பெறலாம் என்ற கருத்து சமூகத்தில் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தை எதிர்பார்ப்புடன் பயன்படுத்தியுள்ளதாகவும், அந்த ஆணைக்குத் தான் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பழைய அரசியல் கலாசாரத்தின் மீதான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அரச சேவையின் செயற்பாடுகள் தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி காரணமாக புதிய அரசியல் சம்பிரதாயத்தினை மக்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயம் என்பனவே காரணமாக அமைந்ததென மக்கள் நம்புவதாகவும், அதனை தடுப்பதற்காகவே இம்முறை மக்கள்ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அரச பொறிமுறை முழுவதும் பரவியுள்ள மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் தான் பாதுகாப்பதாகவும் தெரிவித்தார்.

பிரஜைகளை திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன் மிக்க மற்றும் செயற்திறன் மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய அரச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும், அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த முறை மக்கள் ஆணையின் கட்டமைப்பு, நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர் கடமை உணர்வுடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தமது தரப்பு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அடுத்த மூன்று ஆண்டுகளில் வலுசக்தித் துறையின் இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்தும், மக்களுக்கு வழங்கக்கூடிய குறுகிய மற்றும் நீண்ட கால நிவாரணங்கள் குறித்தும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதில் வலுசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால, மின்சார சபைத்தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய, மின்சார சபை பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.ஜீ. ஆர்.எப்.கொமெஸ்டர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜனக்க ராஜகருணா உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(பொலன்நறுவை)

பொலன்நறுவை, சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முதுன்கம பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (14) இரவு இடம் பெற்றுள்ளது.

சிரிபுர, முதுன்கம பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இவர் காட்டு யானை தாக்கி காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

## புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம்
# நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல்

(கொழும்பு)

கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கு இடைக்காலத்தடையுத்தரவு விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களைப் பரீட்சைக்குத் தோற்றிய சில மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் சமர்ப்பித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின், வினாத்தாளிலிருந்து 3 வினாக்கள் கசிந்தமை தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பரீட்சையை மீண்டும் நடத்தாதிருக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கசிந்ததாக உறுதிசெய்யப்பட்ட 3 வினாக்களுக்கான முழுமையான புள்ளிகளைச் சகல மாணவர்களுக்கும் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

இவ்வாறான பின்னணியில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## சுற்றுலாச் சென்ற
# மாணவர்கள் மீது குளவிக் கொட்டு

நுவரெலியா, பொகவந்தலாவையில் மலைப்பகுதிக்குச் சுற்றுலாச் சென்ற ஆறு பல்கலை மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றுள்ளது.

ஊவா குனைப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 06 மாணவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பல்கலை மாணவர்களின் உடல் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

## மாத்தறையில்
# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை, கேகனதுர பிரதேசத்தில் நேற்று (15) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் பயணித்த நபர் மீது காரில் வந்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் வாகனங்களைப் பறிமுதல் செய்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை – பகுதி I

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**06**

### 1949 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம்

இதே வருடம் 1949 ஆம் ஆண்டு, மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடன் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தினை கொண்டுவந்தார். இச் சட்டத்தால் குடியுரிமையை இழந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டது. அவரது அமைச்சரவையில் பதவியில் இருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

மலையக மக்கள் இலங்கையை தமது சொந்த நாடாகக் கருதி வாழ்ந்து வந்திருந்தனர். 1946 இல் சோல்பரி குழுவினர் 80 வீதமான மலையகமக்கள் இலங்கையை தமது சொந்த நாடாக கருதி வாழ ஆரம்பித்து விட்டனர் என்று அறிக்கையிட்டிருந்த நிலையிலேயே இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மலையக மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

1950இல் இரு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சியும் (LSSP) பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சியும் (BLP) ஒன்று சேர்ந்து லங்கா சமசமாஜக்கட்சி என இயங்கியது. இவ்வாறு ஒன்று சேர்வதை விரும்பாத லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்ப அங்கத்தவரான பிலிப் குணவர்த்தன லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து வேறு சிலரோடு பிரிந்து சென்று விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சியென்ற (VLSSP) புதிய கட்சியை ஆரம்பித்தார்.

இவ்வாறு இடதுசாரிக் கட்சிகள் சித்தாந்த வேறுபாடுகள், முரண்பாடுகள், தலைமைத்துவ போட்டிகள் போன்ற காரணங்களினால் பலவீனமடைந்து காணப்பட்டதால் பலமான எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்து பெயர் பெற்ற இடதுசாரிகள் தோன்றினர். காலனித்துவ ஆட்சியின்கீழ் இருந்த இலங்கைத்தீவை விடுதலை பெற்ற ஒரு நாடாக்குவதிலும் ஜனநாயகம், சோசலிசம், இன ஐக்கியம் போன்ற கொள்கைகளை இலட்சியபூர்வமாய் முன்வைத்த தலைவர்களாகவும் மேற்படி இடதுசாரிகள் முதலிற் காணப்பட்டனர்.

1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள சட்டத்தின் பின்னர் அவர்களின் சிந்தனையில் பெரிய மாற்றம் ஏற்பட்டதோடு தமிழர் மத்தியில் அவர்களது செல்வாக்கும் அற்றுப் போகத் தொடங்கியது. இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்று வளர்ச்சியில் சாதகமான பாதகமான அம்சங்கள் பலதை காணமுடியும். பாராளுமன்றப் பாதை என்ற சந்தர்ப்பாவத அரசியலானது இவ் ஆரம்பகால இடதுசாரிகளை சீரழித்து செயலிழக்கச் செய்து விட்டது. அது மட்டுமன்றி அதிகார மோகத்தால் பேரினவாத முதலாளித்துவத்திற்கும் அவை தம்மைப் பலியாக்கிக் கொண்டன.

### தமிழ்க் காங்கிரசின் பிளவும் தமிழரசுக் கட்சியின் தோற்றமும்

1948 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும், மலையகத் தமிழரின் குடியுரிமை பற்றிய பிரச்சினைகளில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அணுகுமுறைகளையும் ஏற்றுக்கொள்ளாத திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் சில தலைவர்கள் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் மற்றைய பாராளுமன்ற உறுப்பினரான சி. வன்னியசிங்கம் மற்றும் செனட்டர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன்ஆகியோரும் வெளியேறியது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்க் காங்கிரசில் இருந்து பிரிந்த எஸ். ஜே.வி.செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் முதலிய தலைவர்கள் தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட சமஷ்டிக் கட்சியை (Federal Party) 1949இல் உருவாக்கினர்.

தமிழ்க் காங்கிரசை விட தமிழ்த் தேசியவாத கட்சியாக அடையாளம் காணப்பட்ட இக்கட்சியின் செல்வாக்கு வளர்ந்தபோது தமிழ்க் காங்கிரசின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது.

### 1952 ஆம் ஆண்டுத்தேர்தலைக் குறியாக வைத்து சிறுசிறு கட்சிகளின் உதயம்

அக்காலத்தில் 1952 ஆம் ஆண்டுத் தேர்தலைக் குறியாக வைத்து சிறுசிறு கட்சிகளும் உருவாக்கம் பெற்றன. அவற்றுள் சில அரச சபையில் (State Council) சபாநாயகராகவிருந்த போஸ்ரர் ஒபேசேகர (Forrester Obeysekera) 1949இல் சுதந்திர சோசலிஸ்ற் கட்சியை (Independent Socialist Party) உருவாக்கினர்.

1936இல் அரச சபையில் அங்கத்தவராகவிருந்த சட்டத்தரணி ஏ.பி.டி. சொய்ஸா 1952இல் பௌத்த குடியரசுக் கட்சியை (Buddhist Republican Party) உருவாக்கினார். 1956இல் செனட்டராகவிருந்த சட்டத்தரணி எம். டபிள்யு.எச். டி. சில்வா 1952இல் குடியரசுக் கட்சியை(Republican Party) உருவாக்கினார்.

### ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட பிளவும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தோற்றமும்

1946 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்படும் போது எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவும் அவரது சிங்கள மகாசபையும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டதென்பதை முன்னர் கூறியிருந்தோம். 1951ஆம் ஆண்டில் மாதம்பேயில் நடைபெற்ற சிங்கள மகாசபையின் பொதுக் கூட்டத் தீர்மானங்களுடன் ஐக்கிய தேசிய கட்சி ஒத்துழைத்துச் செல்லவில்லை. இதனால் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் அமைச்சரவையிலிருந்தும் 1951.07.12இல் விலகிய எஸ்.டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா 1951.09.02இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பெயரில் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்தார்.

### சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தோற்றத்துடன் எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்காவின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடங்கிய ஆரம்பகாலங்களில் சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக இருத்தல் வேண்டுமென்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மொழிக் கொள்கையாக இருந்தது.

கட்சி உருவாக்கப்பட்ட 1951 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கொள்கை விளக்க அறிக்கையிலும் இவ்வாறே கூறப்பட்டது. ஆனால் 1956 ஆம் ஆண்டு பல கட்சிகளை இணைத்து மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கியது தொடக்கம் தனது பழைய மொழிக் கொள்கையைக் கைவிட்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழி என்பதை ஏற்றுக் கொண்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைத் தொடங்கும் வரையில் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்த எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கிய போது தனது சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு ஒற்றையாட்சி அமைப்பில் சிறுபான்மையோருக்கு உரிமைகளை வழங்குதல் என்பதனையே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டிருந்தார்.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் இரண்டாவது பாராளுமன்றத்தேர்தல் -1952

எல்.எம். டி. த. சில்வா ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தின் படியே இப் பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்றது. அதாவது இத் தேர்தலிலும் 95 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய 89 தொகுதிகளில் வாக்களிப்பு நடத்தப்பட்டன. மிகுதி 6 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜகட்சி, விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சி, தொழிற் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி, பௌத்த குடியரசுக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகியவையும் சில சுயேட்சை அபேட்சகர்களும் தேர்தலில் போட்டியிட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியானது லங்கா சமசமாஜக்கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டது குறிப்பிடத்தக்கதாகும். இத் தேர்தலிலும் வழங்கப்பட்ட சின்னங்கள் அபேட்சகர்களுக்கே ஒழிய கட்சிகளுக்கல்ல.

இப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 1952 ஆம் ஆண்டு மே மாதம் 24, 25, 26, 30 ஆம் திகதிகளில் நடைபெற்றன. 95 ஆசனங்களில் 54 ஆசனங்களைப் வென்றெடுத்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை அமைத்தது. திரு. டட்லி சேனநாயக்க இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்தின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா தெரிவுசெய்யப்பட்டார்.

அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டார். அவர் திரு எஸ்.பி. வைத்திலிங்கம் ஆவார். இலங்கையரான இவர் அரச சபையில் (State Council) 1931இலிருந்து 1946 வரை தலவாக்கலை தொகுதியை பிரதிநிதித்துவம் செய்தவர். இவர் இந்திய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதற்கு இந்திய மக்களிடமிருந்து எதிர்ப்புக்கள் வந்தது.

இரண்டாவது பாராளுமன்றத்தின் மந்திரி சபையில் 14பேர் அமைச்சர்களாக இருந்தனர்.அதில் இருவர் தமிழர்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

பின்னர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக உரையாற்றுவது இதுவே முதற் தடவையாகும். (ம-7)

## அம்மன்...

அம்மன் ஆலயத்திற்கு விசமிகள் சிலர் தீ வைத்துள்ளனர்.

ஆலயத்தின் தென்பகுதி வாயிலூடாக நுழைந்த மர்மக் கும்பல் சிரட்டைகளைக் கொண்டே தீ வைத்துள்ளது.

மேலும், அம்மன் சிலையில் இருந்த வெள்ளித்தாலி ஒன்றினையும் சிலையின் கீழ் இருந்த சிறிய தங்க நகை ஒன்றினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியாதலைமைபொலிஸ் நிலையப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சொத்துக்கள்...

சில் நேற்று நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன்மிக்கதும் செயற்திறன் மிக்கதுமான சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய அரச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அவசியமானதாகும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## பயணிகள்...

தாழ்வு நிலை காரணமாக 2 நாட்களுக்கு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பருவநிலை மற்றும் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கு இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கட்சித்...

கள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் தலைவர் அல்லது செயலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் யாழ்ப்பாண தலைமை பொலிஸ்நிலைய மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ம-7)

## ஐ.நா...

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாட்டின் கல்விச் சீர்திருத்தம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாகப் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அடுத்த ஆண்டு...

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஆண்டின் முற்பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகளின்போது எந்த அநீதியும் இடம்பெறாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

விசாரணைகளின்போது அரசாங்கம் என்ற அடிப்படையில் எந்த அநீதியும் இடம்பெற அனுமதிக்கமாட்டோம். எவரையும் காப்பாற்ற மாட்டோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு காரணமானவர்கள் அனைவருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

மேலும் நாட்டிலுள்ள வெளிநாட்டுக் கையிருப்புக்கள் தீர்ந்து போகாத வகையில் முறையான நடைமுறையின் கீழ் மாத்திரமே வாகன இறக்குமதி மேற்கொள்ளப்படும்.

வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையில் அரசாங்கம் எந்தவித திருத்தத்தையும் மேற்கொள்ளவில்லை.

குறித்த உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வடக்கில்...

வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 36 மணிநேரத்திற்கான வானிலை முன்னறிவிப்பை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

நேற்று மாலை 400 மணியளவில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, நாட்டின் தென்மேற்கு பகுதியில் பெய்து வரும் கடும் மழை நிலைமை இன்று முதல் படிப்படியாகக் குறையும் என நம்பப்படுகிறது.

வட மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன்சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## இலங்...

கணக்காளர்கள் சங்கத்தின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரவிக்கையில், நாங்கள் இணைந்து வளர வேண்டும். செழிப்படைய வேண்டும். நாங்கள் வரலாறுபூவியியல்மற்றும் எதிர் காலத்தினால் இயற்கையாகவே பிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

நாங்கள் ஈடு செய்ய முடியாதவர்கள், இன்றியமையாதவர்கள் மற்றும் பிரிக்க முடியாதவர்கள்.

பிளவுகளை உருவாக்கும் எந்தவொரு முயற்சியும் இருநாடுகளினதும் பகிரப்பட்ட அபிலாசைகள் மற்றும் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ம-7)

# வாகன விபத்து; ஒருவர் மரணம்

(கொழும்பு)

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹதபானாகல - உல்கந்த பிரதேசத்தில் ஹதபானாகல நீர்தேக்கத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின்போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரும் படுகாயமடைந்துள்ள நிலையில் ஹதபானாகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹதபானாகல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார். (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 5626
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 4 4 2 3 1 9

அத சம்பத: ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 2 3 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0201
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2024.10.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1656
Y 26 59 72 75 Y
Double Chance இலக்கம் 011770

### மெகா பவர்

திகதி 15/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1974
L 20 47 55 63 79
Double Chance 096104
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### லக்கி 7 VIP

திகதி 2024.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 0452
D 2 1 5 4 2 8 D
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3868
சீட்டிழுப்பு திகதி 15.10.2024
ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 46 49 65 75
விசேட வெற்றி எழுத்து J | 018605
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.15
சீட்டிழுப்பு இலக்கம் 935
மேஷம் 07 16 38 62 மேஷம்
தன யோக இலக்கம் 030640 | நாளுக்கான விதி எண் 01

### ஜயதன சம்பத (உத்தியோகபூர்வ முடிவுகள்)

15.10.2024 | வெற்றி வாரம் 334 | வர்ணம் சிவப்ப
ஆங்கில எழுத்து Q | மற்றும் வெற்றி இலக்கம் 1 8 7 3 8 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,816,196.00
51862
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2600 | வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 15.10.2024 | தினம் செவ்வாய்
வெற்றி இலக்கங்கள் 21 22 45 75 | ஆங்கில எழுத்து F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,169,073.60
அபிவிருத்தி லொத்தர் சபை

### சனிதா

திகதி 2024.10.15 | வெற்றி வாரம் 4761 | வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 18 20 26 73 | ஆங்கில எழுத்து R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,127,432.80
செகண்ட் சான்ஸ் விசேட இல. | ரூ.100,000/- பணப்பரிசு | 09207
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சசிரி

வெற்றி வாரம் 541
சீட்டிழுப்பு திகதி 2024.10.15
ஊதா
வெற்றி இலக்கங்கள் 39 | 42 | 47
இன்று இரண்டு இலட்சத்திற்கு அதிபதியானோரின் எண்ணிக்கை 08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,855,600/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4312 | வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.10.15 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 12 29 56 | கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,711,297.20
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 164725
அபிவிருத்தி லொத்தர் சபை

### லக்ன வாசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 24 08 20 28 60
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 550,571,995.40
சீட்டிழுப்பு வாரம் 1776 | வர்ணம் இள இளஞ்சிவப்பு | திகதி 15.10.2024 செவ்வாய்
DLB DEVELOPMENT LOTTERIES
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2426
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2024.10.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,623,810.40
வெற்றி இலக்கங்கள் 28 33 57 74 | ஆங்கில எழுத்து Z
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 894493
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (2296)

**076 825 7716** (ஆகாஸ்)



**உதவி பிராமண பூசகர் தேவை**

கரவெட்டியில் உள்ள பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயத்திற்கு நித்திய உதவி பிராமணர் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறியத் தரவும். தொலைபேசி இல:

**077 612 8431, 077 038 3285**

தொடர்பு கொள்ளும் நேரம் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரையும் தொடர்பு கொள்ளவும். (C-1405)


# தேர்தலை...

மான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க சகல ஊடகங்களிடமும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் மற்றும் வேட்புமனுத் தாக்கல் என்பன கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.

அதனையடுத்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், சுயேட்சையாகவும் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் நாடளாவிய ரீதியில் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உள்ளடங்கலாக இந்த ஒட்டுமொத்தத் தேர்தல் செயன்முறையையும் சீரான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கொழும்பிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகப்பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பில் மும்மொழிமூல இலத்திரனியல் மற்றும் அச்சூடகங்களின் பிரதானிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக ஊடகங்களால் வழங்கப்பட்ட காலப்பகுதியின் நியாயபூர்வத்தன்மை, தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் ஊடகங்களும் அதனை உரியவாறு பின்பற்றி நடந்துகொண்டமை, பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்களை மக்களிடம் கொண்டுசென்று சேர்ப்பதில் ஊடகங்கள் வழங்கிய ஒத்துழைப்பு என்பவற்றை நினைவுகூர்ந்து நன்றி தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, அக்காலப்பகுதியில் சில ஊடகங்களின் நியாயமற்ற நடத்தைகளைச் சுட்டிக்காட்டி, அவை மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், எதிர்வரும் பொதுத்தேர்தலை நியாயமான முறையில் நடாத்திமுடிப்பதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறும், இத்தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் இயலுமானவரை சமத்துவமான பிரசார வாய்ப்பை அளிக்குமாறும் அவர் ஊடகப்பிரதானிகளிடம் கேட்டுக்கொண்டார். (ம-7)


**யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்**

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (432)

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

அரச, தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) தேவை.
வயது : 22 - 45 (2321)

தொடர்புகளுக்கு :
**076 756 2772**



**DCM - யாழ் நகர்**
(யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

கருத்தரங்கு
**தமிழ் A/L 2024**

4 நாட்கள் 20.10.2024 03.11.2024 / 02.11.2024 09.11.2024 Pm 1.00 - 5.00

பிரபல சிரேஷ்ட தமிழ் ஆசிரியர்
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் (2309)

நிர்வாகம் 077 778 9815



**DCM - யாழ் நகர்**
(யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

கருத்தரங்கு
**வரலாறு A/L 2024**

2 நாட்கள் 17.10.2024 Am 8.00 - 12.30 / 19.10.2024 Pm 12.30 - 4.30

**S.S.Y. பிரதீபன்**
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் (2309)

நிர்வாகம் 077 778 9815



**விற்பனைக்கு**

மூன்று கடைகளும், மாடி வீடு இரண்டும், இரும்புக் கதவு ஐந்தும், வெளிப்புறக் கதவு இரண்டும், ஓடு தீராந்தி கதவுகள் உடன் விற்பனைக்கு உண்டு. (C-1402)

**077 723 2535**








**லைமன்ஹவுஸ் விற்பனைக்கு**

மானிப்பாய் லோட்டன் வீதியில் லைமன் ஹவுஸ், (வேலன்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (2300)

**074 2700 765**





இலங்கை - யாழ்ப்பாணம் - அச்செழு
**வைரவர் கோயில் என வழங்கும்**
**அருள்வளர் வீரபத்திர சுவாமி திருக்கோயில்**
புனராவர்த்தன அஷ்டபந்தன நவ (09) குண்ட பக்ஷ

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**
**21.10.2024**

சிவ நேயச் செல்வர்களே!

ஈழமணித்திருநாடு சிவம்பெருக்கும் நாடு. இத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் வலிகிழக்கில் நீர்வேலியூரின் சமீபமான சிற்ரூரான பல்வளமும் செறியும் அச்செழுத்திருவூரில் பன்நெடுங்காலமாக பழமையான அரசமர நிழலில் பைரவரும் வீரபத்திரருமாக சிவ வடிவம் கொண்டு இறைவன் அருளொளி பரப்பி வருகின்றான்.

சிவபெருமான் அன்பர்களைக் காத்தருளச் செய்தருளும் கருணைச் செயல்கள் மறக்கருணை, அறக்கருணை என இருவகைப்படும். இந்த மறக்கருணைச் செயல்களில் தக்கனை ஆட்கொண்டருளிய வீரபத்திரக் கோலமும் பிரம்மனை ஆட்கொண்டருளிய பைரவக் கோலமும் இணைந்து போற்றப்படும் திருத்தலம் இந்த அச்செழு வீரபத்திரர் தலமாகும். இத்தகு சிறப்புடைய பழமையான தலத்தை புதுப்பித்தும் வர்ணம் தீட்டியும் திருப்பணிகள் செய்து இந்த மங்கலகரமான குரோதி வருடம் ஐப்பசி மாதம் 05 ஆம்நாள் சோம வாரமும் மிருகசீருஷ நட்சத்திரமும் கூடிய ஸோம மிருகசீருஷம் என்ற சுபயோக சுப தினத்தில் காலை 09.12 முதல் 10.00 மணிவரையுள்ள விருச்சிக லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் செய்யத் திருவருள் கைகூடியுள்ளது. இந்த மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழாவிலும் அதற்கு முன்னும் பின்னும் நடைபெறும் வழிபாடுகளிலும் இணைந்து வேண்டிய நலமெலாம் அருளும் வீரபத்திர சுவாமியின் திருவருள் பெற அன்போடு அழைக்கின்றோம்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரு (12) தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று நிறைவு நாளில் சங்காபிஷேகம் இடம்பெறும்.

**அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து இறைவனின் திருவருளைப் பெறுவீர்களாக !**

கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வாழ்த்துவோர்
(2312) V.K.சபாரத்தினம் குடும்பத்தினர்.



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 18.09.2024 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லத்துரை தர்மலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.10.2024 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.10.2024 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

கல்வளை, சண்டிலிப்பாய். (2318) **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.